# Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :Suresh |
| Father's Name | :Sivaraj |
| Village | :New Town |
| Taluk | :Vaniyambadi |
| Caste | :- |
| Calling | :- |
| Religion | :Hindu |
| Age | :53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2025.

OS.No.65/2015 PW2 Name:**சுரேஷ்**

**முதல் விசாரணை**

சாட்சியம் அளிக்க நீதிமன்றதிலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் கூறுகிறேன். வழக்கின் வாதிகள் பிரதிவாதிகள் வழக்கு சொத்துகள் பற்றி தெரியும். பிரதிவாதி ராதா என்னுடைய தாயார். பாலகிருஷ்ணன் என்னுடைய தாய்மாமன். தாவா சொத்து பாலகிருஷ்ணனுடையது. அவர் வாதிகள் பெயருக்கு ஒரு ஆவணத்தை பதிவு செய்து கொடுத்தும் ஒரு ஆவணத்தை விக்கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார். அவை இரண்டும் ஒரே நாளில் ஏற்பட்டது. விக்கிரைய ஒப்பந்த சொத்தில் செக்குபந்தி வராத காரணத்தினால் உடனடியாக கிரையம் செய்யபடவில்லை. வாசாஆ1 ஆவணத்தில் 2வது உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான்.

இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மற்ற சாட்சிகள் 1ம் வாதியின் கணவர் தமிழரசன், 2ம் வாதியின் கணவர் சார்லஸ் மற்றொருவர் என்னுடைய தம்பி ரமேஷ் ஆவார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கைரேகை என்னுடைய தாய்மாமன் பாலகிருஷ்ணனுடையது ஆகும். என் தாயார் உயிருடன் உள்ளார். என் தம்பி ரமேஷ் உள்ளூரில் தான் உள்ளார். சொத்துகள் தற்போது வாதிகள் சுவாதீனத்தில் உள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். 2014 ஆண்டு செப்டம்பர் 20 தேதி பாலகிருஷ்ணன் கபீல் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டபோது நானும் என் தம்பி உடன் இருந்தோம். என்னுடைய அம்மா ராதா, பெரியம்மா பாப்பம்மாள் ஆகியோர்கள் இருந்தார்கள். கபீல் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து 3வது நாளில் பாலகிருஷ்ணன் மிகவும் உடல்நிலை மோசமடைந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு அவருக்கு உடல்நிலை சரியாக சுமார் 5 நாட்கள் ஆனாது. அவர் மருத்துவமனையிலே இறந்துவிட்டார். 20.09.2014ல் மருத்துவமனையில் பாலகிருஷ்ணன் அனுமதிக்கபட்ட பின் மீண்டும் மருத்துவமனையிலிருந்து உயிருடன் வெளியே வரவில்லை. வாதிகள் மற்றும் அவர்களுடைய கணவர்களை எனக்கு எங்கள் ஊரில் இருப்பதால் நன்றாக தெரியும். பாலகிருஷ்ணன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கு நான் சுமார் 1 லட்சம் செலவு செய்தேன். அதன்பிறகு அடக்க செலவுகள் அனைத்தையும் நானும் என் தம்பியும் தான் செய்தோம். பிரதிவாதிகள் கம்சலா, சுமதி ஆகியோர்கள் இறப்பிற்கு மட்டும் வந்தார்கள் வேறு எதற்கும் வரவில்லை. பாலகிருஷ்ணன்

இறப்பதற்கு முன்னரும் பின்னரும் நானும் என் எங்கள் குடும்பத்தாரும் குடியிருக்கிறோம். எவ்வளவு பணம் கொடுத்து கிரைய ஆவணத்தில் கையெழுத்து போடபட்டது என்பது என் மாமாவிற்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. அந்த ஆவணம் தற்போது என்னிடம் காட்டபடுவதுதான் அது பிசாஆ1. வாசாஆ1 ஆவணத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்கபட்டது என்பது எனக்கு தெரியாது என் மாமாவிற்கு தான் தெரியும். வாசாஆ1 ஆவணத்தில் உள்ள நிபந்தனைகள் என்ன என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள தொகை மற்றும் ஆவணங்கள் தொடர்பான விவரங்கள் தெரியாது. எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து குறித்து கிரைய பத்திரம் எழுதபட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாசாஆ1 ஆவணத்தில் உள்ள சர்வே எண் சொத்து குறித்து தெரியாது. மருத்துவமனையில் இருந்துள்ள சமயத்தில் இருந்த அவர் இறக்கும்வரை அவரது பணம் குறித்து எனக்கு தெரியாது நாங்கள் தான் செலவு செய்தோம். பாலகிருஷ்ணன் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டது முதல் இறக்கும்வரை எங்களிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை. பணம் கொடுக்காமல் தான் பாலகிருஷ்ணனிடம் வாசாஆ1 ஆவணத்தில் கைரேகை பெறபட்டது என்றால் அவ்வாறு இல்லை. அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் அது என்னிடம் தான் இருக்கவேண்டும் என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணத்தை யார் தயாரித்தார் என்று எனக்கு நியாபகம் இல்லை பிசாஆ1 ஆவணம் யார் தயார் செய்தார் என்று தெரியாது நியாபகம் இல்லை. என்னிடம் காட்டபடும் வாசாஆ1, பிசாஆ1 இரண்டு ஆவணங்களிலும் மரியா ஜோசப் என்ற வழக்கறிஞர் சீல் வைத்து கையெழுத்து போட்டுள்ளார் ஆனால் அந்த இடத்தில் இல்லை. வாசாஆ1 ஆவணத்தில் அவர் எந்த தேதி குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் அவரை

பார்க்கவில்லை தேதி எனக்கு தெரியாது. ஆவணங்களை எந்த பத்திர எழுத்தர் தயாரித்தார் என்று எனக்கு தெரியாது. எந்த இடத்தில் வைத்து தயார்செய்யபட்டது என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததால் நான் வந்துள்ளேன். சம்மன் வந்த பின் நான் ஆவணங்களின் நகல் எதையும் பார்க்கவில்லை. பத்திர எழுத்தர் கையெழுத்து நான் பார்க்கவில்லை. வாசாஆ1 பிசாஆ 1 ஆவணங்களை என்னிடம் யார் கொண்டுவந்து கொடுத்து கையெழுத்து வாங்கினார் என்றால் அவர் பெயர் தெரியவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே வைத்து கையெழுத்து வாங்கபட்டது. நான்கு நபர்களும் ஒன்றாகதான் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னுடைய மாமா பாலகிருஷ்ணன் அழைத்ததால் தான் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். 4 கையெழுத்துகள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியேயும் 2 கையெழுத்துகள் சார்பதிவாளர் உள்ளே வைத்தும் போட்டேன் பாலகிருஷ்ணன் கூப்பிட்டு நான் கையெழுத்து போட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

பிசாஆ1 மற்றும் வாசாஆ 1 ஆவணங்களில் உள்ள வருவாய் துறை பட்டா ஆவணத்தில் மரியா ஜோசப் வழக்கறிஞர் சான்று கையொப்பம் செய்துள்ளார்.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 27/10/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B
SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.10.27 16:25:36 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.